
Aum Sri Sai Ram



# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின்

# 78வது பிறந்ததின வெளியீடு

23-11-2003

**White Field Sithankeny**

பகவான் ஸ்ரீ ச தி சாயி ாவின்

# அவதாரம்

78வது

# பிறந்ததின வெளியீடு

## 23.11.2003

W... fie...

...aankeny

# ஓம் ஸ்ரீஸாயி ராம்

## கணேச ப்ரார்த்தனை

* சுக்லாம்பரதரம் விஷ்ணும்
  சசிவர்ணம் சதுர்புஜம்
  ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
  ஸர்வ விக்னோப் சாந்தயே ||

* அகஜானன பத்மார்கம்
  கஜானன மஹர்னிசம் |
  அனேகதம் தம் பக்தானாம்
  ஏகதந்தம் உபாஸ்மஹே ||

### குரு ப்ரார்த்தனை

* குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு : குருர் தேவோ மஹேச்வர: .
  குருஸ்ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம:

* ஓம்கார ரூபிணம் பக்த ஜனாநந்த ப்ரதாயினம் |
  ஸத்ய ஸாயீச்வரம் வந்தே ஸத்குரும் கருணாகரம் ||

* ஹ்ருதாகாசே ஸதாபாந்தம் சாந்தம் ஆனந்த ரூபிணம் |
  ஞான பானும் அஹம் வந்தே ஸத்குரும் ஸ்ரீ ஸத்ய ஸாயினம் ||

### ஸ்ரீ காயத்ரி மந்த்ரம்

ஓம் பூர்புவஸ்ஸுவ: | தத் ஸவிதுர் வரேண்யம் |
பர்கோ தேவஸ்ய தீமஹி | தியோ யோ ந: ப்ரசோதயாத் ||

ஸாயீச் ...ாய வித்மஹே ஸத்ய தேவாய தீமஹி।
தன் ...வ ப்ரசோதயாத்॥

ஸாயி ராமாய வித்மஹே ஆத்மா ராமாய தீமஹி।
தந்நோ பாபா ப்ரசோதயாத்॥

# பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி ஸுப்ரபாதம்

* ஈச்வராம்பா ஸுத ஸ்ரீமன்
  பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே
  உத்திஷ்ட ஸத்ய ஸாயீச
  கர்த்தவ்யம் தைவ மாஹ்னிகம்

* உத்திஷ்டோத்திஷ்ட பர்த்தீச
  உத்திஷ்ட ஜகதீபதே
  உத்திஷ்ட கருணா பூர்ண
  லோக மங்கள ஸித்தயே

* சித்ராவதீ தடவிசால ஸுசாந்த ஸௌதே
  திஷ்டந்தி ஸேவக ஜனாஸ்தவ தர்சனார்த்தம்
  ஆதித்ய காந்திரனுபாதி ஸமஸ்த லோகான்
  ஸ்ரீ ஸத்ய ஸாயி பகவன் தவ ஸுப்ரபாதம்

* த்வந்நாம கீர்த்தன ரதாஸ் தவ திவ்ய நாம
  காயந்தி பக்தி ரஸபான ப்ரஹ்ருஷ்ட சித்தா:
  தாதும் க்ருபா ஸஹித தர்சனமாசுதேப்ய:
  ஸ்ரீ ஸத்ய ஸாயி பகவன் தவ ஸுப்ர...ாதம்

- ஆதாய திவ்யகுஸுமானி மனோஹராணி
ஸ்ரீ பாத பூஜன விதிம் பவ தங்க்ரிமூலே
கர்த்தும் மஹோத்ஸுக தயா ப்ரவிசந்தி பக்தா:
ஸ்ரீ ஸத்ய ஸாயி பகவன் தவ ஸுப்ரபாதம்

- தேசாந்தராகத புதாஸ்தவ திவ்ய மூர்த்திம்
ஸந்தர்சனாபிரதி ஸம்யுத சித்த வ்ருத்யா
வேதோக்த மந்த்ர படனேன லஸந்த்ய ஜஸ்ரம்
ஸ்ரீ ஸத்ய ஸாயி பகவன் தவ ஸுப்ரபாதம்

- ச்ருத்வா தவாத் புத சரித்ரம் அகண்ட கீர்த்திம்
வ்யாப்தாம் திகந்தர விசால தராதலேஸ்மின்
ஜிக்ஞாஸுலோக உபதிஷ்டதி சாச்ரமேஸ்மின்
ஸ்ரீ ஸத்ய ஸாயி பகவன் தவ ஸுப்ரபாதம்

- ஸீதா ஸதீ ஸம விசுத்த ஹ்ருதம்புஜாதா:
பஹ்வங்கனாஹ் கரக்ருஹீத ஸுபுஷ்ப ஹாரா:
ஸ்துன்வந்தி திவ்ய நுதிபி ஃபணிபூஷணம் த்வாம்
ஸ்ரீ ஸத்ய ஸாயி பகவன் தவ ஸுப்ரபாதம்.

- ஸுப்ரபாதமிதம் புண்யம்
யே படந்தி தினே தினே
தே விசந்தி பரந்தாம
ஞான விக்ஞான சோபிதா:

- மங்களம் குரு தேவாய
மங்களம் ஞான தாயினே
மங்களம் பர்த்தி வாஸாய
மங்களம் ஸத்ய ஸாயினே.

பகவான் ஸ்ரீஸத்ய ஸாயி பாபா

# அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ பகவான் ஸத்ய ஸாயி பாபாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய ஸ்வரூபாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய தர்ம பராயணாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி வரதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸத் புருஷாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்யகுணாத்மனே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது வர்த்தனாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது ஜன போஷணாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வக்ஞாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஜன ப்ரியாய நம: 10
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ சக்தி மூர்த்தயே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வேசாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஸங்க பரித்யாகினே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வாந்தர்யாமிநே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி மஹிமாத்மனே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி மஹேச்வர ஸ்வரூபாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி பர்த்தி க்ராமோத்பவாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி பர்த்தி க்ஷேத்ர நிவாஸினே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி யசஹ்காய சிர்டி வாஸினே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஜோடி ஆதி பள்ளி ஸோமப்பாய நம: 20
ஓம் ஸ்ரீ ஸாயி பாரத்வாஜ ரிஷி கோத்ராய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த வத்ஸலாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி அபாந்தராத்மனே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி அவதார மூர்த்தயே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பய நிவாரிணே நம:

ஓம் ஸ்ரீ ஸாயி ஆபஸ்தம்ப ஸூத்ராய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி அபய ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி ரத்னாகர வம்சோத்பவாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி சிர்டி ஸாயி அபேத சக்த்யாவதாராய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி சங்கராய நம: 30

ஓம் ஸ்ரீ ஸாயி சிர்டி ஸாயி மூர்த்தயே நம:

ஓம் ஸ்ரீ ஸாயி த்வாரகாமாயி வாஸினே நம:

ஓம் ஸ்ரீ ஸாயி சித்ராவதீ தட புட்டபர்த்தி விஹாரிணே நம:

ஓம் ஸ்ரீ ஸாயி சக்தி ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ சரணாகதத்ராணய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி ஆனந்த ாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி ஆனந்த தாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி ஆர்த்த த்ராண பராயணாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி அனாத நாதாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி அஸஹாய ஸஹாயாய நம: 40

ஓம் ஸ்ரீ ஸாயி லோக பாந்தவாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி லோக ரக்ஷா பராயணாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி லோக நாதாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி தீன ஜன போஷணாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி மூர்த்தி த்ரய ஸ்வரூபாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி முக்தி ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி கலுஷ விதூராய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி கருணாகராய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வாதாராய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஹ்ருத் வாஸினே நம: 50

ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ புண்ய பலப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பாப க்ஷயகராய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ரோக நிவாரிணே நம:

ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பாத ஹராய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி அனந்தநுத கர்த்ருணே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஆதி புருஷாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஆதி சக்தயே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி அபரூப சக்தினே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி அவ்யக்த ரூபிணே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி காமக்ரோத த்வம்ஸினே நம: 60
ஓம் ஸ்ரீ ஸாயி கனகாம்பர தாரிணே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி அத்புத சர்யாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஆபத் பாந்தவாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேமாத்மனே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேமு மூர்த்தயே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேம ப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரியாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ப்ரியாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த மந்தாராய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ஜன ஹ்ருதய விஹாராய நம: 70
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ஜன ஹ்ருதயாலயாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த பராதீனாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி பக்தி ஞான ப்ரதீபாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி பக்தி ஞான ப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸுக்ஞான மார்க தர்சகாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஞான ஸ்வரூபாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி கீதா போதகாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஞான ஸித்திதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸுந்தர ரூபாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி புண்ய புருஷாய நம: 80
ஓம் ஸ்ரீ ஸாயி பல ப்ரதாய நம:

ஓம் ஸ்ரீ ஸாயி புஷோத்தமாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி புராண புருஷாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி அதீதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி காலா தீதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸித்தி ரூபாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸித்த ஸங்கல்பாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஆரோக்ய ப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி அன்ன வஸ்தர தாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸம்ஸார துஹ்க க்ஷயகராய நம: 90
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வாபீஷ்ட ப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி கல்யாண குணாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி கர்ம த்வம்ஸினே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது மானஸ சோபிதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ மத ஸம்மதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது மானஸ பரிசோதகாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸாதகானுக்ரஹ
வட வ்ருக்ஷ ப்ரதிஷ்டாபகாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸகல ஸம்சய ஹராய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸகல தத்வ போதகாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி யோகீச்வராய நம: 100
ஓம் ஸ்ரீ ஸாயி யோகீந்த்ர வந்திதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ மங்கள கராய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஸித்தி ப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஆபந் நிவாரிணே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஆர்த்தி ஹராய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி சாந்த மூர்த்தயே நம:
ஓம் ஸ்ரீ ஸாயி ஸுலப ப்ரஸன்னாய நம:
ஓம் ஸ்ரீ ஸாயி பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபாய நம: 108

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

# மங்களா சாஸனம்

❀ ஸாக்ஷாத் ப்ரஹ்ம ஸ்வரூபாய
ஸாக்ஷாத் ஸ்ரீ விஷ்ணு ரூபிணே
ஸாக்ஷாத் சம்பு ஸ்வரூபாய
ஸாயி ராமாய மங்களம்

❀ ஸர்வ லோக சரண்யாய
ஸச்சிதானந்த மூர்த்தயே
சிவசக்தி ஸ்வரூபாய
ஸாயி ராமாய மங்களம்

❀ ஸாது சித்த விஹாராய
ருக்யஜுஸ்ஸாம மூர்த்தயே
ஸுப்ரஸன்ன முகாப்ஜாய
ஸாயி ராமாய மங்களம்

❀ வேத வேதாந்த வேத்யாய
விச்வ ரூபாத் மகாயச
வரதாபய ஹஸ்தாய
ஸாயி ராமாய மங்களம்

❀ சித்ராவதீ தீர வாஸினே
ப்ரிய வாஸினே
பக்தஹ்ருதய விஹாராய
ஸாயி ராமாய மங்களம்

❁ ஸர்வ லோக சரண்யாய
ஸர்வாபீஷ்டப்ரதாயினே
ஸர்வ பாப ஹராய
ஸாயி ராமாய மங்களம்

❁ ப்ரசாந்தி நிலய வாஸ ஸ்வாமினே
பக்தி தாயினே
அவதார வரிஷ்டாய
ஸாயி ராமாய மங்களம்

❁ மங்களம் குரு தேவாய
மங்களம் விச்வகர்மணே
மங்களம் வேதவேத்யாய
மங்களம் ஞான தாயினே

❁ மங்களம் ப்ரேம ரூபாய
மங்களம் சாந்தி தாயினே
மங்களம் பூஜ்ய பாதாய
மங்களம் ஸத்ய ஸாயினே

## லாலி

❁ லாலி லாலைய்ய லாலி
லாவண்ய குண சீலா (௨)
லாலி பன்னக ஸாயி
வுய்யால லூக வய்யா - லாலி

❁ சிர்டி க்ஷேத்ரமுலோ
பவளிம்ப ஸாயி தேவா (௨)
ச்ருங்கார முகனே நீ
வுய்யால லூக வய்யா - லாலி

❋ அண்டாண்ட பிண்டாண்ட
ப்ரஹ்மாண்ட முலநெல்ல (௨)
நிண்டியுண்டே ஸத்ய ஸாயி
வுய்யால லூக வய்யா - லாலி

❋ தேஜோன்மய சித்விலாஸா
தீன ஜன ஸம்ரக்ஷக
ராஜேந்த்ரா ரவீந்த்ரா ஸுரேந்த்ரா
நரேந்த்ரா நாராயணா
ஜோஜோ ஜோ

❋ ஸகல சாஸ்த்ர ஸத்ஸார
ஸஹஸ்ரநாமாங்கீதாகாரா
அகளங்க சுபாங்க ஸ்ரீ ரங்க
ச்ருங்கார வதனா
ஜோஜோ ஜோ

❋ ஹ்ருதய கமல வுய்யாலலோ
புருஷோத்தம பவளிம்ப
பரமேசா பர்த்தீசா
சிர்டிசா பாப நாசனா
ஜோஜோ ஜோ
ஸத்ய ஸாயி நாதா
ஜோஜோ ஜோ

# திருவூஞ்சல்

1) உலகநிலை யுறுதர்மம் கால்களாக
உன்னதமாம் சத்தியமே விட்டமாக
மலவிருளே அகல்சாந்தி இழையதாக
மனுக்குலம் உய்பிரேமையதே கயிறதாக
நீலவினொளிர் ஞானமதே பலகையாக
நிடுபிரபஞ்ச மெனும் ஊஞ்சல்மேவி
தலம்புகழும் பெங்களூர் புட்டபர்த்தி
சத்யசா யீஸ்வரனே ஆடீரூஞ்சல்.

௨)மறையோதும் அந்தணர்கள் மகிழ்ந்து போற்ற
வைஷ்ணவரும் சைவருமே மலர்கள் தூவ
இறையோனாம் பரமபிதா இயேசு அன்பர்
இஸ்லாத்தைத் தழுவிடுவோர் இறைஞ்சி ஏத்த
கறைமலிந்த இதயத்தின் இருளகன்று
கருணைநெறிப் புத்தர்களும் கரங்கள் கூப்ப
துறையுணரு ஞானியரும் தொழுது ஏத்த
தூயசா யீஸ்வரனே ஆடீரூஞ்சல்

3) சந்தேக நிவாரணியே ஆடீரூஞ்சல்
தத்துபோ தகாயநம ஆடீரூஞ்சல்
சித்தாகுலங் களைவாய் ஆடீரூஞ்சல்
சீர்டிசாயி மூர்த்தயே ஆடீரூஞ்சல்
நந்தா விளைக்கனையாய் ஆடீரூஞ்சல்
ஞானஸ்வ ரூபாய ஆடீரூஞ்சல்
எந்தாயும் தாதையுமே ஆடீரூஞ்சல்
எழிற்சாயி ஈஸ்வரனே ஆடீரூஞ்சல்

4)முத்திப் ப்ரதாயகனே ஆடீரூஞ்சல்
மும்மைக்குந் துணைவனே ஆடீரூஞ்சல்
பக்தர்கள்தம் ரட்சகனே ஆடீரூஞ்சல்
பரமஅவ தாரநம ஆடீரூஞ்சல்
நித்யநிர் மலசுகுண ஆடீரூஞ்சல்
நிஷ்கள நிரஞ்சனே ஆடீரூஞ்சல்
சித்துகளில் வல்லவனே ஆடீரூஞ்சல்
சிவசாயி ஈஸ்வரனே ஆடீரூஞ்சல்

5)எல்லையிலா ஆனந்தமே ஆடீரூஞ்சல்.
ஈஸ்வராம் பிகைசுதனே ஆடீரூஞ்சல்.
தொல்லைவினை களைபவனே ஆடீரூஞ்சல்.
தூயபிரே மாத்மனே ஆடீரூஞ்சல்.
இல்லைபயம் என்பவனே ஆடீரூஞ்சல்.
எழில்அபயக் கரத்தவனே ஆடீரூஞ்சல்.
கொல்லுபகை வெல்தகையே ஆடீரூஞ்சல்.
கேர்தில்சத்ய நாரணனே ஆடீரூஞ்சல்.

6)மனுக்குலத்தோர் உலகெங்கும் வந்துஏத்த
வரையாதுன் அமுதமதை மாந்தியுய்ய
அனுக்கிரகப் பெற்றோர் தம் வினைகள் நீங்க
ஆதிபுரு ஷாயநம ஆடீரூஞ்சல்.
மினுக்குலக வாழ்க்கையற ஞானமோங்க
மெய்யுலக வாழ்வுபெற மார்க்கங் காட்டும்
மனக்குதிரைச் சாரதியே ஆடீரூஞ்சல்.
மகேஸ்வரனே சாயிராம் ஆடீரூஞ்சல்.

7)தொண்டர்குழாம் தொழுவோர்க்குச் சேவை செய்ய
துதிப்பவர்கள் பஜனையிலே தோய்ந்து நிற்க
மண்டலிகள் தோறுமிறை வழங்கும்ஞானம்
மாந்துபவர் கூடிநிதம் மனமாண்பெய்த
கண்டவர்கள் விண்டறியாக் கமலப்பாதம்

காத்துநிதம் ஏத்திடுவர் கமலச்செங்கண்
அண்டர்கள் நாயகனே அவதாரமூர்த்தி
ஆதிபல்லி சோமப்பா ஆடீரூஞ்சல்.

௮)துதிபகரும் பஜனைக் குழாம் சூழ்ந்துபாட
தொண்டரணி தஞ்சேவை துரிதாயாற்ற
முதிர்வுறுநல் ஞானியர்கள் கவரிவீச
முந்திடுபல் சமயிகளும் கவிகைதாங்க
எதிர்வருநற் பக்தர் குழாம் மலர்கள் தூவ
எண்ணரிய மனுக்குலத்தோர் இறைஞ்சிஏத்த
கதிர்வி பொற் சிகையோனே ஆடீரூஞ்சல்
ஹரிகிருஷ்ணா சாயியே ஆடீரூஞ்சல்.

௯)வேதமதை யோதுமொலி விண்ணைமுட்ட
மெய்யடியார் துதிக்குமொலி மிகுந்து கேட்க
நாதமிரு தங்கஇசை நன்கு சேர
நரம்பினிசை யாழினொலி நாயங்கள் கூட்ட
பாதபங் கயம்வியந்த பஜனைமாந்திப்
பாலர்விருத் தாப்பியர்தம் பயனென்றேத்த
கீதையுப தேசிகனே ஆடீரூஞ்சல்
கிருஷ்ணா யீஸ்வரனே ஆடீரூஞ்சல்.

௰)மறைவாழி மனுக்குலத்தோர் வாழி வாழி
மழைவாழி மாதர்கள் தம் கற்பும் வாழி
இறைநாமம் ஏத்துபவர் என்றும் வாழி
ஈடில்லாப் பரங்கருணை வாழிவாழி
குறையாச்சௌ பாக்கியங்கள் கொழித்து வாழி
கோடிநலம் பாரிலுளோர் கூடி வாழி
நிறையோங்கு பிரசாந்தி நிலையம் வாழி
நின்மலசா யீஸ்வரனே வாழிவாழி

# நமஸ்தே நமஸ்தே

நமஸ்தே நமஸ்தே குரு மஹாராஜ்
ஸத்குரு ஸ்ரீ ஸத்ய ஸாயி மஹாராஜ்
சரணம் சரணம் ஸ்ரீ ஸாயீசா
ஸாஷ்டாங்க சரணம் ஸர்வேசா

குறிப்பு:- இப்பாடல், விவரமான சம்ப்ரதாயங்களைத் தழுவாமல் நடத்தப்படும் கல்வி வட்டம், துதிகள் பாடுதல், பஜனைப் பயிற்சி போன்ற ஆன்மீகக் கூட்டங்களின் முடிவில் பாடப்படும் துதி.

# சாந்தி மந்திரம்

அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர் கமய
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய
ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி:

# ஸர்வ மத ப்ரார்த்தனை

ஓம் தத்ஸத் ஸ்ரீ நாராயண தூ
புருஷோத்தம குரு தூ
ஸித்த புத்த தூ ஸ்கந்த விநாயக
ஸவிதா பாவக தூ
ப்ரஹ்ம மஸ்த தூ யஃவ சக்தி தூ
ஏசு பிதா ப்ரபு தூ
ருத்ர விஷ்ணு தூ ராமக்கிருஷ்ண தூ
ரஹிம் தாவோ தூ
வாஸுதேவ கோ விச்வரூப தூ
சிதானந்த ஹரி தூ
அத்விதீய தூ அகால நிர்பய
அத்மலிங்க சிவ தூ (3)

# மங்கள ஆரத்தி

❋ ஓம் ஜெய் ஜகதீச ஹரே ஸ்வாமி ஸத்ய ஸாயி ஹரே
பக்த ஜனா ஸம்ரக்ஷக (௨)
பர்த்தி மஹேச்வரா
ஓம் ஜெய் ஜகதீச ஹரே

❋ சசி வதனா ஸ்ரீ கரா
ஸர்வ ப்ராண பதே
ஸ்வாமி ஸர்வ ப்ராண பதே
ஆச்ரித கல்பலதீகா (௨)
ஆபத் பாந்தவா
ஓம் ஜெய் ஜகதீச ஹரே.

❋ மாதா பிதா குரு தய்வமு
மரி அந்தயு நீவே
ஸ்வாமி மரி அந்தயு நீவே
நாத ப்ரஹ்ம ஜகன்னாதா (௨)
நாகேந்த்ரா சயனா
ஓம் ஜெய் ஜகதீச ஹரே

❋ ஓம்கார ரூபா ஓஜஸ்வி
ஓ ஸாயி மஹாதேவா
ஸத்ய ஸாயி மஹாதேவா
மங்கள ஸாரதி அந்துகோ (௨)
மந்தர கிரிதாரி
ஓம் ஜெய் ஜகதீச ஹரே.

✽ நாராயண நாராயண ஓம்

ஸத்ய நாராயண நாராயண நாராயண ஓம்

நாராயண நாராயண ஓம்

ஸத்ய நாராயண நாராயண ஓம் (உ)

ஓம் ஜெய் ஸத்குரு தேவா

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி:

லோகா .......... ஸ்ஸமஸ்தா... ஸ்ஸுகினோ... பவந்து

ஜெய் போலோ பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாய பாபா ஜீகி.... ஜெய்.

குறிப்பு:- 'நாராயண நாராயண ஓம்' முதல் 'ஓம் ஜெய் ஸத்குரு தேவா' வரையிலான இத்துதியின் கடைசி பதம் மூன்று முறை அதிகரிக்கும் வேகத்தில் பாடப்பட வேண்டும்.

# வீபூதி மந்த்ரம்

பரமம் பவித்ரம் பாபா விபூதிம்

பரமம் விசித்ரம் லீலா விபூதிம்

பரமார்த்த இஷ்டார்த்த மோக்ஷ ப்ரதானம்

பாபா விபூதிம் இதமாச்ரயாமி

குறிப்பு:- ஆரத்தி எடுத்த பிறகு, விபூதி ப்ரஸாதத்தைப் பெற்றுக் கொள்ளும் போது, இந்த மந்திரத்தை மூன்று முறை பாட வேண்டும்.

# சிவராத்திரி வழிபாடு

ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்
கருதி இடத்தாற் செயின்.

காலம் அறிந்து செயலைச் செய்ய வேண்டும். இதனால் பயன் அதிகம் பெறலாம். சிவவிரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதமே ஆகும். 'சிவராத்திரி' என்ற சொல்லுக்கு துக்கங்களைப் போக்கிச் சுகத்தை நல்குவது என்பதே பொருளாகும்.

விரதம்:- மாசி மாதம் கிருஷ்ண பட்சம் சதுர்த்தசி திதியன்று வருவது மகா சிவராத்திரியாகும். மக்களாய்ப் பிறந்தவர்கள் இந்நாளைப் பொன்னே போல் போற்றி வழிபட வேண்டும். அதிகாலையில் எழுந்து நீராடி, திரு நீறணிந்து, உத்திராட்சம் அணிந்து, சிவபூசை செய்தும், பஞ்சாட்சரம் (ஓம்சிவாய நம) ஓதுதல் வேண்டும். பகல் முழுவதும் உபவாசம் இருத்தல் வேண்டும். இயலாத வர்கள் பால், பழம் அருந்தலாம்.

மாலையில் மீண்டும் நீராடி, சிவாலயம் சென்று நெய் விளக்கு ஏற்றலாம். அகங் குழைந்து தேவாரத் திருமுறைகளை ஓதலாம்.

இரவில் நான்கு காலங்களில் சிவபூசை செய்தல் வேண்டும். இயலாதவர்கள் கோயிலில் நடைபெறும் பூசைகளில் கலந்துகொண்டு பயன் பெறலாம். மறுநாள் காலை நீராடி சிவபூசை முடித்து விரதத்தை முடிக்க வேண்டும். இவ் விரத வழிபாடு புரிந்தவர்களின் வினைகள் யாவும் தீயிலிட்ட பஞ்சுபோல் எரிந்து ஒழிந்து விடும்.

உலகங்களும் உயிர்களும் ஒடுங்கும் கற்பமுடிவின் இரவில் நான்கு யாமத்தும் உமையம்மையார் சிவபெருமானை விதிப்படி பூசித்து மகிழ்ந்த இரவே சிவராத்திரி என வழங்கப் பெறுகிறது. இந்நாளில் வழிபடும் அனைவருக்கும் சகல நன்மைகளையும் அருள வேண்டும் என அம்பாள் வேண்ட, சுவாமியும் அவ்வாறே அநுக்கிரகம் செய்தருளினார்.

சிவராத்திரி வரலாறு:- மேலும் சிவராத்திரி தினத்திற்கு ஓர் முக்கியத்துவம் உண்டு. பிரமனும், திருமாலும் 'தானே பிரம்மம்' என்று போட்டியிட்டனர். அப்போது பரம்பொருள் (சிவபெருமான்) மாசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய இரவில் அனற்பிழம்பாய் எழுந் தருளினார். இதனுடைய அடியையும், முடியையும் இருவரும் காணாமல் திகைத்தனர். பின்பு சிவபெருமான் இவர்கட்குத் தம் உருவைக் காட்டி அருளிய இரவும் இதுவேயாம்.

சிவராத்திரியில் சிறந்த நேரம் 'இலிங்கோத்பவ காலமாகும்'.

இக்காலம் இரவு 11.30 மணிக்கு மேல் 1.00 மணி வரையாகும். இந்த நேரத்தில் ஒருமைப்பட்ட மனதுடன் பஞ்சாட்சரத்தியானம் செய்வது மிகுந்த பலனை அளிப்பதாகும்.

பயன்:-பஞ்சமா பாதகம் செய்த கொடியவனும் சிவராத்திரி அன்று சிவபெருமானைத் தரிசித்து முக்தி பெற்ற வரலாறுகள் உண்டு. இத்தினத்தன்று செய்யும் தானம், ஜெபம், தருமம் முதலியவை பலநூறு மடங்காகப் பெருகி இகபர நலன்களை நல்கும் 'சிவராத்திரி' தினம் கிடைப்பது மிகவும் அரிய விஷயமாகும். சைவனாகப் பிறந்த யாவரும் இந்நாளில் மேற்கூறிய வாறு வழிபாடு செய்து தப்பாமல் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து, அம்மையே 'சிவலோகம்' ஆளும் பேறு பெரும்படி வேண்டி அமைகிறேன்.

மேலும், இவ்விரதம் நோற்றே பிரமன் படைப்புத் தொழிலையும், திருமால் காத்தல் தொழிலையும், இந்திரன் பொன்னுலகத்தையும், குபேரன் அளகாபுரியினையும் பெற்றார்கள். எத்தகைய தீவினையும் இவ்விரதத்தினால் அழிந்தொழியும்.

# பிரதோஷ கால வழிபாடு

சிவபெருமானுக்குரிய வழிபாட்டுக் காலங்களில் பிரதோஷகாலமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 'பிரதோஷம்' என்பது ஆன்மாக்களின் முற்பிறப்புக் குற்றங்களை நீக்குவதாகும். பிரதோஷ காலம் சூரியாஸ்தமனத்தோடு துவங்குகிறது. மனம் ஈசுவரனிடத்தில் ஒடுங்குவதற்கு இதுவே உகந்த காலமாகும்.

'வானிடத்தவரும் மண்மேல்வந்து
அரன்தனை அர்ச்சிப்பர்
ஊனெடுத்துழலும் ஊமர் ஒன்றையும்
உணரார்'

என்பது அருணந்தி சிவாசாரியார் வாக்காகும். கிடைத்தற்கு அரிய இப்பிறப்பை பயனுள்ளதாக்க இந்தப் பிரதோஷ கால வழிபாடு மிக அவசிய மாகும்.

**பிரதோஷகாலம்:-**பிரதி மாதம் வளர்பிறை, தேய்பிறை காலங்களில் திரயோதசி திதியின் பிற்பகல் 4.30 மணிமுதல் 7 மணிவரை உள்ள காலமே பிரதோஷ காலம் எனப்படும். (எனவே தினமும் மேற்கண்ட காலத்தைப் பிரதோஷ காலமாக எண்ணி வழிபாடு செய்ய வேண்டும்)

**பிரதோஷவரலாறு:-** மரணமில்லாப் பெருவாழ்வைத் தரும் அமிர்தத்தைப் பெறுதல்

வேண்டித் தேவர்களும் அசுரர்களும் மந்தர மலையை மத்தாகவும் வாசுகிப் பாம்பைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். வருத்தமடைந்த வாசுகி விஷத்தை உமிழ்ந்தது இந்த நஞ்சு யுகத்தி ற்கே முடிவைத் தருவது போல எரித்துத் துன்புறுத்தியது. தேவர்கள் யாவரும் ஓடினார் கள். அனைவரும் கயிலையம் பதியை அடைந்து சிவபெருமானிடம் முறையிட் டார்கள்.

கருணையே உருவமான கண்ணுதற் கடவுள் அருகில் இருந்த சுந்தரரை அனுப்பி, விடத்தைக் கொண்டு வரச் செய்தார். அக் கொடிய நஞ்சினை அமரர்கள் உய்யும் பொருட்டு உட்கொண்ட கண்டத்தில் நிறுத்திக் கொண் டார். இதனை திருஞானசம்பந்தப் பெருமான்

பரவிவானவர் தானவர் பலருங்
கலங்கிட வந்தகார்விடம்
வெருவ வுண்டுகந்த
அருள் என்கொல்? விண்ணவனே
கரவின் மாமணி பொன் கொழித்திழி
சந்து கார் அகில் தந்து பம்பை நீர்
அருவி வந்தலைக்கும்
ஆமாத்தூர் அம்மானே.

என்று இரண்டாம் திருமுறையில் பாடிப் பரவுவதைக் காணலாம்.

பரம்பொருளின் அனுமதியுடன் மீண்டும் அமரர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து சகல செல்வங்களையும் பெற்று மகிழ்ந்தார்கள்.

அமிர்தம் உண்ட அமரர்கள் வேண்ட, ஆருயிர்த்திரள் துன்பம் நீங்கி இன்பம் அடையவும், சிவபெருமான் கையில் தமருகம் ஏந்தி இடப தேவரின் இரு கொம்புகளுக்கு இடையே உமாதேவியார் காண, திருநடம் செய்தருளினார். இதுவே 'பிரதோஷ காலம்' எனப்படும். அந்த நாள் திரயோதசி திதி மாலை 4.30 மணி முதல் 7.00 மணி வரையாகும்.

விரதம் அனுஷ்டிக்கும் முறை:- பிரதோஷ காலத்தில், ரிஷபத்தில் மதிசூடிய மகேஸ் வரனை உமா தேவியுடன் ரிஷபாரூட மூர்த்தி யாக வழிபடுவோர் ஆயிரம் அசுவமேத யாகங்களைச் செய்த பலனைப் பெறுவர்.

வளர்பிறை, தேய்பிறை ஆகிய இருபட்சங்களிலும் வரும் திரயோதசி திதியன்று அதிகாலையில் எழுந்து நீராடி, அவரவர்கட்குரிய அனுட்டானங்களை முடித்து, சிவாலயம் சென்று வழிபட வேண்டும். (அன்று உபவாசமிருக்கலாம்) அன்று முழுவதும் தேவாரம், திருவாசகம் முதலிய அருள் நூல் களை ஓதுதல் வேண்டும். அன்று மாலை 4.30 மணிக்கு சிவாலயம் சென்று இயன்ற அளவு அபிஷேகம், அர்ச்சனை செய்வித்து திரு ஐந்தெழுத்தின் (ஓம் சிவாய நம) உள்ளம் உருகி ஓதுதல் வேண்டும்.

சுவாமிக்கு முன் எழுந்தருளியுள்ள இடப தேவருக்கு அறுகம்புல் மாலை சாத்துதல்,

நெய்விளக்கு ஏற்றுதல், தான தருமஞ்செய்தல் முதலியன அளவிலா புண்ணியத்தைத் தரும்: பிரதோஷ காலத்தில் இறைவனை இடப தேவரின் இரு கொம்புகளுக்கு இடையே கண்டு வணங்குதல் முறையுமாகும். பிரதோஷ காலம் கழிந்த பின் உணவு அருந்தி துயிலலாம்.

சிவபெருமான் தேவர்கட்கு திருநடனத் தரிசனம் கொடுத்த நாள் சனிக்கிழமையாகும். எனவே சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷம் மிக மேலானது ஆகும்.

**பிரதோஷகால பூஜாபலன்:-** பிரதோஷ கால வழிபாட்டினால் செல்வம் வளரும். நோய்கள் அகலும், கல்வியில் மேன்மை அடைவார்கள். கடன், மனக்கவலை, வறுமை, மரண வேதனை முதலியன நீங்கும். ஒரு பிரதோஷ வழிபாட்டி னால் 1000 நாட்கள் சிவபூஜை செய்த பலன் பெறலாம். இக்காலத்தில் சிவ ஆலயத்தை ஐந்து முறை வலம் வந்து அளவிலா பேறு பெறலாம்.

**பிரதோஷ காலத்தில் செய்யவேண்டிய சோம சூத்தகப் பிரதட்சிணம்:-**

முதலில் சிவலிங்கத்தையும், ரிஷப தேவரையும் வணங்கிக் கொண்டு அப்பிரதட் சண மாக சண்டேசுரர் சந்நிதி வரை சென்று, அவரை வணங்கிக் கொண்டு, அப்படியே திரும்பி வந்து, முன்போல் சிவலிங்கத்தையும் ரிஷப தேவரையும் வணங்கிக் கொண்டு, வழக்கம் போல் பிரதட்சணமாக ஆலயத்தை

வலம் வரவேண்டும். அப்படி வலம் வரும்பொழுது சுவாமி அபிஷேகத் தீர்த்தம் விழும் தொட்டியை கடக்காமல் அப்படியே வந்தவழியே திரும்பி, அப்பிரதட்சணமாக சந்நதிக்கு வந்து சிவலிங்கத்தையும், ரிஷப தேவரையும் வணங்க வேண்டும். இப்படியே மூன்று முறை வரவேண்டும். இது அநேக அசுவமேத யாகம் செய்த பலனைத் தரும் என சான்றோர் கூறியுள்ளனர். (இயலாதவர்கள் சாதாரணமாகவே பக்தியுடன் வலம் வந்து வணங்கலாம்).

## வீடுகளில் விளக்கேற்றும்போது பாடவேண்டிய அற்புதப் பாடல்

திருவிளக்கினை இலட்சுமியின் அம்சமாகக் கருதுவது நமது இயல்பாகும். 'அருளது சக்தியாகும்அரன் தனக்கு இறைவருடைய அருளே சக்தி எனப் போற்றப்படுகிறது. அத்தகைய இறையருளை அம்பாளை தீபத்தில் அமரச் செய்து நலம் பெறுதல் பொருட்டே வீடுகளில் காலையும், மாலையும் விளக்கேற்றப்படுகிறது. 'ஆவாஹனம்' எனும் சொல்லுக்கே 'அழைத்தல்' என்றுதான் பொருள். எங்கும் நிறைந்திருக்கும் இறையருளை - சக்தியை - லட்சுமி தேவியை, நாம் ஏற்றும் தீபத்தில் அமர்ந்து அருள் புரியும்படி செய்ய வேண்டும்.

கீழே காணும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடலை பாடியவாறே தீபத்தை ஏற்ற வேண்டும். இப்பாடலை அருளியவர் குமர குருபர சுவாமிகள் ஆவர். இவர் மதுரையில் அரங்கேற்றம் செய்யும்போது, மீனாட்சி யம்மையே இப்பாடலுக்கு மகிழ்ந்து குழந்தை யாக வந்து, முத்து மாலையை அருளி மறைந்தாள் என்பது உண்மை வரலாறு ஆகும். தமிழகம் செய்த புண்ணியம் நமக்கு இப்பாடல்கள் கிடைத்துள்ளன. இப்பாடல் இன்றி தீபம் ஏற்றுவது மணம் இல்லா மலர் போல என உணர்க.

பாடல்:-

பெருந்தே னிறைக்கும் நறைக் கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறை மௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி

விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக்கிளியே வருகவே
மலையத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.

இப்பாடலைப் பாடிய வண்ணம் விளக்கை ஏற்றினால் அம்பாள் (ஆவாஹனம்) ஒளியில் விளங்கியிருப்பாள். விருந்தினரை அழைத்த பிறகு உபசாரம் செய்ய வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும். பின்வரும் திருவாசகப் பாடலைப் பாடி அம்பாளை திருப்திபடுத்த வேண்டும்.

**விளக்கு ஏற்றிய பிறகு பாட வேண்டிய திருவாசகப் பாடல்**

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத்து அயனும் மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

இப்படிச் செய்வதால், வீடுகளில் செல்வம் நிறைந்து இன்பமாக வாழலாம். மங்களமே நடக்கும். வீடுகளில் இலட்சுமி வாசம் செய்வாள்.

தண்பொழில் சூழ் சண்பையர் கோன்
தமிழ்ஞானசம்பந்தன்
விண்பொலி வெண்பிறைச் சென்னி விகிர்தன்
உறை வெண்காட்டைப்
பண்பொலி செந்தமிழ் மாலை பாடிய
பத்து இவை வல்லார்
மண்பொலி வாழ்ந்தவர் போய் வான்
பொலியப் புகுவாரே.

திருச்சிற்றம்பலம்

# திருநீற்றுப்பதிகம்

திருவாலவாய் பண்: காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருவால வாயான் திருநீறே 1.

தேவத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த
திருவால வாயான் திருநீறே 2.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே 3.

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே 4.

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே 5.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த
திருவால வாயான் திருநீறே 6.

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான்
திருநீறே 7.

இராவணன் மேலது நீறு எண்ணத் தருவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான்
திருநீறே 8.

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமது உண்டமிடற்று எம் ஆலவாயான் தீருநீறே 9.

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளார் எத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே 10.

ஆற்றல் அடல்விடை ஏறும் லவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

## எல்லா தீவினைகளையும் போக்கி பதி புண்ணியத்தை நல்கும் அற்புதப் பதிகம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி,
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 1.

பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவி யென்சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்ற போற்றி 2.

மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 3.

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்து என்தன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீயாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 4.

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போன்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராது என்சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவியான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும்இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5.

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாது என் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்த்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 6.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி
என் சிந்தை நிங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 7.

இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாக அணைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 8.

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல்நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9.

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலிப் போற்றி
அங்கும் ஒன்று அறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
போயிலா என் சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 10.

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின் சொல்கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகிற்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 11.

திருச்சிற்றம்பலம்

மனக்கவலை நீக்க வல்லது ஆனந்தம் அளிப்பது

# சிவபுராணம்

**தொல்லை யிரும்பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே- எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.**

*நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க*


*வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க*

*ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்*

பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதிமலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரியு பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

சிவபுராணம் முற்றிற்று



Harikanan Printers, 424,K.K.S Road, Jaffna.